# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

ஆணை நாள் 10.11.2020

**முன்னிலை**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 7851/B/2019**

| | |
|---|---|
| திரு. M. ராஜரத்தினம் | மேல்முறையீட்டாளர் |
| எதிர் | |
| பொது தகவல் அலுவலர்,<br>தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,<br>சேலம் வட்டம்,<br>சேலம் மாவட்டம். | பொது அதிகார அமைப்பு |

**ஆணை**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (10.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய தின விசாரணையில் மனுதாரர், திரு.M. ராஜரத்தினம், ஓய்வு பெற்ற கிராம நிர்வாக அலுவலரும் பொது தகவல் அலுவலர் மற்றும் தலைமையிடத்து துணை வட்டாட்சியர், சேலம் வட்டம் அவர்களும் விசாரணையில் கலந்து கொண்டார்கள்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)ன் கீழ் அளிக்கப்பட்ட தனது 1/2//2019 தேதியிட்ட மனுவில் தனது ஓய்வூதிய பதிவேட்டில், தனது மனைவியின் பெயர் சேர்ப்பது சம்பந்தமாக பொது தகவல் அலுவலர் மற்றும் வட்டாட்சியர், சேலம் வட்டம் சேலம் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார்.

3. பொது தகவல் அலுவலரிடமிருந்து தகவல் எதுவும் பெறப்படாத நிலையில், 1.7.2019 தேதியிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு விண்ணப்பித்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்தும் பதில் எதுவும் கிடைக்கப் பெறாததால் மனுதாரர், 6.8.2019 தேதியிட்டு, இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார்.

4. இன்றைய விசாரணையின்போது, பொது தகவல் அலுவலர் மனுதாரருக்கு உரிய தகவலை ஐந்து நாட்களுக்குள் அனுப்பி வைத்து அதன் நகலினை ஆணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டார். பொது தகவல் அலுவலர் மனுதாரருக்கு 13.11.2020 தேதியிட்ட கடிதத்தின் மூலம் மனுதாரருக்கு பதில் வழங்கி, அதன் நகலினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனை பரிசீலனை செய்கையில், மனுதாரருக்குரிய தகவல் அவருக்கு வழங்கப்பட்டது என்பதை ஆணையம் பதிவு செய்து, இவ்வழக்கின் விசாரணை முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA/7851B/2019</u>**

பெறுநர்
<u>பொது அதிகார அமைப்பு</u>
பொது தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
சேலம் வட்டம், சேலம் மாவட்டம்.

மனுதாரர்
திரு. M. ராஜரத்தினம்,
கிராம நிர்வாக அலுவலர் (ஓய்வு),
232, தாதம்பட்டி போஸ்ட்,
சேலம் - 636 014.
அலைபேசி - 94430 88951

Copy to: File
SSPA-18.11.2020